Registered as a News paper in Ceylon விலை சதம் 10




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [15-3- 7] இதழ் 3

பராபவ பங்குனி 1 ஜுல்ஹஜ் 3 புதன்கிழமை




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

## ஆஸ்பத்திரியில் புதிய வார்ட்

### யாழ். வரவேற்பில் சுகாதாரமந்திரி தகவல்

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணத்திலுள்ள புற்றுநோயாளர்கள் இனிமேல் சிகிச்சை பெறுவதற்கு கொழும்புக்குச்செல்லவேண்டியதில்லை. யாழ்ப்பாணத்திலேயே மூன்றுவது புற்றுநோய் சிகிச்சை நிலையம் விரைவில் நிறுவப்படவிருக்கிறது.**

வடஇலங்கை உணவு தானிய மொத்த வியாபாரிகள் சங்கம் நேற்றுப் பிற்பகல் கஸ்தூரியார் வீதியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் அளித்த வரவேற்பில் சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தன மேற்கண்டவாறு பேசுகையில் கூறினார்.

பழைய பஸ்நிலைய சந்தியிலிருந்து சுகாதார மந்திரி திரு. ஜயவர்த்தனவும், அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். இவ்வரவேற்பு விழாவுக்கு சங்க உப தலைவர் திரு. மு. குமாரசாமிப்பிள்ளை தலைமை வகித்தார். சுகாதார மந்திரி ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:—

#### மற்றுமொருவார்ட்

'தேசிய அரசாங்கம் மக்களின் சுகாதார வாழ்க்கையில் அதிக அக்கறைஎடுத்து வருகிறது. யாழ்ப்பாணஆஸ்பத்திரியில் 104 படுக்கைகளைக்கொண்ட மற்றொரு வார்ட் விரைவில் கட்டப்படவிருக்கிறது. இதன் மூலம் அங்கு நிலவும் இடநெருக்கடியை ஒருவாறு குறைக்கமுடியும். இங்குமனநோய் சிகிச்சை நிலையம் ஆரம்பிப்பதற்காக லையனஸ் ஸ்தாபனத்தில் ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளனர். மனநோய் சிகிச்சைநிலையமும் விரைவில் ஆரம்பமாகும்.

பொதுமக்களுக்கு சகல பொருட்களும் நியாயமான விலைக்கு கிடைக்கஇச்சங்கம் முயற்சி எடுக்குமென எதிர்பார்க்கிறேன். இவ்விஷயமாக அரசாங்கஅதிபருக்கு உங்கள்சங்கத்தின் உதவி அவசியம்தேவை மக்களுக்கு கிடைக்கமுடியாத பொருட்களை கிடைக்கச்செய்வதற்கு உங்கள் சங்கம் முயற்சிஎடுக்கவேண்டும்''

#### முதல்தடவை

திரு. குமாரசாமிப்பிள்ளை பேசும்போது யாழ்ப்பாண சரித்திரத்தில் முதன் முதலாக வர்த்தகர்கள் ஒன்றுபட்டு மந்திரிக்கு வரவேற்பு அளித்துள்ளார்களென்றும் கள்ள மார்க்கட்டை ஒழிக்கவும், ஏழைமக்களுக்கு உணவுப்பொருட்கள் இலகுவில் கிடைக்கவும் சங்கம் பாடுபடுமென்றுகூறினர்.

## தண்ணீர்வாய்க்காலில் பெண்ணின் சடலம்

### தீர்ப்பு வழங்குவதை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார்

கிளிநொச்சி, செவ்.

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியை சேர்ந்த சுந்தரம் செல்லம்மா [வயது 35] என்னும் பெண்ணின் உடல் தண்ணீர் வாய்க்காலில் இறந்தநிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் ஸ்தலத்தில் சென்று விசாரணை நடத்தினர்.

காலம்சென்றவரின் மகன் சுந்தரம் ஜெ ராசசிங்கம் சாட்சியமளிக்கையில் தனது தாயார் கொழும்பு, மாத்தளை ஆகிய இடங்களுக்கு தகப்பனாரின் அனுமதியின்றி சென்றுவருவதாகவும் தானும் தகப்பனாரும் காலம் சென்றவரைப் பிரிந்து ஆறு வருடமாக வேறிடத்தில் வசித்துவருவதாகவும் கூறினார்.

கிளிநொச்சி உதவி வைத்திய அதிகாரி டாக்டர் ரி. வி. ஞானதுரை பிரேதபரிசோதனை நடத்தினார்.

டாக்டரின் பரிசோதனையின்போது காலஞ்சென்றவர் ஆறுமாதம் கர்ப்பிணி எனத் தெரிவிக்கப்பட்டது. விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து, கிளிநொச்சிப் பொலிசாரை புலன்விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டார்.

## சுகாதார மந்திரிக்கு உடுவில் எம்.பி.கராம்புமாலை

யாழ்ப்பாணம், புதன்

உத்தியோகபூர்வமாக இரண்டு நாள் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டுள்ள சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன நேற்றுக் காலை 5-35க்கு ரயிலில் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். ரயில் நிலையத்தில் யாழ்ப்பாணம் ரயில் நிலைய அதிபர் திரு. எஸ். சிவக்கொழுந்து, வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர் மலர்மாலையிட்டு அவரை வரவேற்றார்கள்.

ரயில்நிலையத்தின் உள்ளும் புறமும் தேசியக்கொடியாலும், தாமரை மலர்கள், மகரதோரணங்கள், வாழைகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அமைச்சர் ரயிலிலிருந்து இறங்கியதும் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கராம்பினால் தொடுக்கப்பட்ட மாலை ஒன்றை அமைச்சருக்கு அணிவித்தார்.

சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கம், சுகாதார சேவை டைரக்டர் திரு, எச். குணரத்ன, யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரப் பகுதி அத்தியட்சகர் டாக்டர் இரத்தினசபாபதி, பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. டபிள்யு. செல்வரத்தினம், யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். புள்ளைநாயகம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் ரயில் நிலையத்திற்கு வந்திருந்தார்கள்.

அமைச்சர் மோட்டார் வண்டியில்காங்கேசன்துறை விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். [ந. நி.]

## உத்தியோக மொழிஇலாகா கமிஷனர்யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் சிங்களம் கற்பிக்க முயற்சிமேற்கொள்ளப்படவிருக்கின்றது. இது சம்பந்தமாக இம் மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு விசேஷ மாகாநாடு நடைபெறவிருக்கின்றது.

அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ள உத்தியோக மொழி இலாகா கமிஷனர் திரு. டி. விஜயசேகரா நாளை யாழ்ப்பாணம் வருகின்றார். [ந. நி.]

## ஆலயப் பிரவேசம் முதல்வழக்கு

கொழும்பு, செவ்.

சிறுபான்மைத் தமிழர் ஒருவர் தொண்டமனாறு செல்வசன்னதி ஆலயத்தில் பூசைகள் செய்ய அனுமதியாமல் தடை செய்ததாக இரண்டு அர்ச்சகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

1957-ம் ஆண்டு அமுலுக்கு வந்த சமூக ஏற்றத் தாழ்வுகள் நீக்கத்துக்கான சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் வழக்கு இதுவாகும்.

தொண்டமானாறு எஸ். லெக்குமணன் என்பவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இவ்வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் 1-ம் திகதி நடைபெறும்.

## கொழும்பு மேயர் மகாநாடு கூட்டுகிறார்

### உள்ளூராட்சி மந்திரியின் புதியதிட்டம் பற்றி ஆராய்வர்

கொழும்பு, செவ்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அதிக அதிகாரங்கள் [illegible]ளிக்கும் வகையில் [illegible]ள்ளூராட்சி மன்றங்கள் [illegible]பந்தமான சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு உள்ளூராட்சி மந்திரி ஆலோசித்து வருவது குறித்து ஆட்சேபம் தெரிவிப்பதற்காக கொழும்பு மேயர் ஜனாப் ஜாபிர் ஏகாதர் நாடுபூராவிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மேயர்கள் ஆகியவர்களின் [illegible] இப்பொழுது உள்ளூராட்சி சேவைக் கமிஷனுக்கு இருந்துவரும் அதிகாரங்கள் அதிகரிக்கப்படுமானால் உள்ளூராட்சிமன்றங்களின் நிலை மோசமாகிவிடுமென்று தெரிவித்துள்ள கொழும்பு மேயர், இது பற்றி ஆராய்வதற்கு ஒரு மகாநாட்டுக்கு வரும்படி நாட்டிலுள்ள மேயர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியவர்களை அழைத்திருக்கின்றார்.

உள்ளூராட்சி சேவைக் கமிஷனில் தற்பொழுது உள்ளூராட்சி மன்றங்களின் [illegible] நால்வர் இருந்[illegible]ாகவும் ஆனால் மந்திரியின் திட்டம் அமுலுக்கு வந்தால் இந்த உரிமை இல்லாமல் பாவதுடன், புதிய கமிஷனில் 5 நபர்களை மந்திரியே நியமிக்க வசதி ஏற்படும் என்றும் கருதப்படுகின்றது.

## கூ.மொ.வி.ஸ்தாபனத்துக்கு நாலரை கோடி ரூபாய் லாபம்

### உணவு பண்டங்களின் விலைகள் குறையலாம்

கொழும்பு, செவ்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு இவ்வருடம் 4 கோடி 50 லட்சம் ரூபாய் நிகரலாபம் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக முக்கிய உணவுப்பண்டங்களின் விலைகளை இப்போது குறைக்க முடியுமா என்பது பற்றி அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு ஒரு கோடி 7 லட்சம்ரூபாமட்டுமே நிகர

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சேவல் குஞ்சுகள்:

1 நாள், 1 கிழமை, 1 மாதப் 2 மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

[Biscuit Cutters, Fancy Birds, Peppermints] இனிப்பு வகைகள் செய்யக்கூடிய சாமான்கள் விற்பனைக்கோ அல்லது கொமிஷனுக்கோ கொடுக்கப்படும். தங்கநாயகம், 'சிறீவாசா', திருநெல்வேலி வடக்கு. 1620

## தேவை

வேலை

S.S.C. சித்தியடைந்த கணக்கு வைப்பதில் ஒரு வருட அனுபவம் உள்ள, ஆங்கிலத்தில் டைப் அடிக்கவும், கடிதம் எழுதவும் தெரிந்த ஒரு வாலிபருக்கு வேலை தேவை விளம்பர இல. 1625

## தேவை

மனேஜர்

யாழ். ஆஸ்பத்திரி கூட்டுறவு நலவிருத்திச் சங்க கன்ரீனுக்கு ஒரு மனேஜர் தேவை. 25 வயதுக்கும் 45 வயதிற்கும் உட்பட்டவர். பிணை: ரூபா 1000/- காசு: ரூபா 1000/- ஆதனப் பிணை. சம்பளம்: ஒரு தேநீர் தயாரிப்பவர், ஒரு விற்பனையாளர் உட்பட ரூபா 225/- இரண்டு நற்சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கவும். கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களதுமனு விசேஷமாகக் கவனிக்கப்படும். மனுப்பண்ணுவோர் 22-3-67 நணபகலுககுமுன் சங்கக் காரியதரிசிக்குபதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்க. செ. துரைசிங்கம், கௌரவ காரியதரிசி. 1622

ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1625

## நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம

யாழ்ப்பாணம், புதன்

''நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் சேவைகள் பாராட்டக் கூடியதாகவும் மற்றைய சமுகநல ஸ்தாபனங்களுக்கு ஓர் முன்மாதிரியாகவும் அமைந்திருக்கின்றன. இக் கழகம் நடத்தும் நீர்வேலி பாலர்விடுதி சிறப்பான முறையில் இயங்கி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இதுபோன்ற பாலர் விடுதிகள் இலங்கையில் மிகவும் குறைவு'' என்று அண்மையில் நடைபெற்ற நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் பதினைராவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சமுகசேவைகள உதவி டைரக்டர் திரு. ஜே என். அப்பாதுரை, பேசுகையில் கூறினர்.

புதுவருட நிர்வாகிகள் வருமாறு:- போஷகர்கள்: திரு. எம். சிறிகாந்தா [காணி அமைச்சு நிரந்தரக் காரியதரிசி], திரு. வேர்ணன் அபயசேகரா. உபபோஷகர்கள்:- திரு. வேதாரண்யசேயோன், பிரம்மஸ்ரீ எஸ். ராஜேந்திரக் குருக்கள், திரு. பி. தில்லையம்பலம் தலைவர் திரு. ஈ. கே. சண்முகநாதன். உபதலைவர் திரு. ரி. எஸ். கனகசபை, ருதி. ஜி. அப்புத்துரை காரிபதரிசி: திரு. வி எஸ். அம்புத்துரை. உதவிக் காரியதரிசி. திரு. எஸ். கனகசபாபதி 9 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஸ்ரீ சிதம்பரேஸ்வர சன சமூக நிலைய ஆண்டு விழாவின் போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. அ. தம்பையா, உப தலைவர் திரு. கா. சின்னத்தயபி, காரியதரிசி திரு. க. இந்திர லோகநாதன், உப காரியதரிசி திரு. அ. நவரத்தினம், தனதிகாரி திரு. ச. பொ. கோபால் எண்மர் அடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# விளம்பரம்

## நீர்வேலிக் கிராமசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

என்னுல் ஊரெழு பொக்கணை ரோட்டு அமைப்பதற்கு ரூபா 10,000/- [பத்தாயிரம்] ற்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இக் கந்தோரில் ரூபா 50/- [ஐம்பது] பிணைப்பணமாகச் செலுத்தி பெற்ற பத்திரங்களில் தான் நிரப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் இன்று தொடக்கம் 27-3-67 திங்கட் கிழமை முற்பகல் 11-00 மணிவரையும் வழங்கப்படும்.

கேள்விப் பத்திர மனுக்கள் ''தலைவர், நீர்வேலிக் கிராமசபை, நீர்வேலி'' என்று விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 28-3-67 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு முன் எமது அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாய் அனுப்பப்படல் வேண்டும். காகித உறையின் இடதுபக்கத்தில் ''ஊரெழு பொக்கணை ரோட்டு'' என்று எழுதப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான விபரங்கள் யாவும் இவ்வலுவலகத்தில் வேலைநேரங்களில் அறியலாம்.

க. குலசிங்கம்,
கி. ச. தலைவர்,
நீர்வேலி.

கி. ச. அலுவலகம்,
நீர்வேலி,
11-3-67. 2481

## பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் சுண்டிக்குளி

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்குப்பதிவு, ஆங்கிலம், சிங்களம்.

ஒருமாதம் பாடம் ஒன்றுக்கு ரூபா 6/- கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச் செய்க.

கௌரவ செயலாளர்,
12, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். 2482

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி 236-ம் இலக்க கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப.க. பரமநாதன் அவர்களிடம் 13-6-63 தொடக்கம் 31-12-65 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 29-3-67 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவுகடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 2476

## நச்சுத்திராவகம் அருந்தினர்

மீசாலை, செவ்வாய்

மீசாலை தெற்கைச் சேர்ந்த தம்பு சிற்றம்பலம் என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். உடனடி சிகிச்சையில் இவர் ஆபத்திலிருந்து தப்பியுள்ளார்.


ராதா மணி மார்க்

# சந்தனதிக் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068



மலச் சிக்கலை மிக இயல்பாக அகற்ற
உபயோகியுங்கள்
அற்புதமான புதிய பேதி மருந்தான
வண்டலெக்ஸ்
ஒரு றெக்கிட் அன் கோலமன் உற்பத்திப் பொருள்





அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சரும[illegible]தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நா[illegible] அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானில் ஜனதிபதி ஆட்சி

## சட்டசபைக் கூட்டம் நிறுத்திவைக்கப்பட்டது

### நிலைமை குறித்து சவான் விளக்கம்

புதுடில்லி, மார்ச் 14

இந்தியாவின் வடமேற்கு ராஜ்யமான ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான பிரகடனத்தில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்நேற்றிரவு கையெழுத்திட்டார். ராஷ்டிரபதி ஆட்சி ராஜஸ்தானில் உடனடியாக அமுலுக்கு வருமென்று இந்திய உள்துறை மந்திரி திரு. வை. பி. சவான் அறிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் மந்திரிசபை நிறுவுமாறு கவர்னர் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுத்திருந்தபோதிலும் எதிர்க்கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் காரணமாகத் தம்மால் அரசாங்கம் அமைக்க முடியாதிருக்கின்றது என்று ராஜஸ்தான் முதன்மந்திரி திரு. சுகாடியா மத்திய அரசாங்கத்துக்கு அறிவித்திருந்ததைத் தொடர்ந்து புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சவான் விளக்கம்

நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் உள்துறை மந்திரி திரு. வை. பி. சவான் ராஜஸ்தான் நிலைமைகுறித்து விளக்கினார்.

மந்திரிசபை அமைக்கும் வாய்ப்பு எதிர்க்கட்சிகளுக்கு ஏன் வழங்கப்படவில்லை என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு திரு. சவான் பதிலளிக்கையில் எதிர்க்கட்சியினர் பெரும்பான்மை குறைந்தவர்களாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பான்மை கூடிய மந்திரிசபை அமைப்பதற்கு அழைக்கப்பட்டதென்று கூறினார்.

### "இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும்"

"ராஜஸ்தான் [ராஜ்ய] சட்டசபை செவ்வாய்க்கிழமை கூடவிருந்தது. சட்டசபை கூடும்போது எதிர்க்கட்சியினர் சட்டசபை நோக்கி ஊர்வலங்களும், வேறு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளவும், பாதுகாப்பு, தடை நடவடிக்கைகளை மீறவும் திட்டமிட்டிருந்தனர். இது நிகழும்பட்சத்தில் இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும். இத்துடன் மோசமான சம்பவங்களும் ஏற்பட்டுக் குழப்பமானதொருநிலை உருவாகியிருக்கும். இதனைத் தடுக்கும் முகமாகவே சட்டசபை கூடுவது நிறுத்தப்பட்டு அங்கு ராஷ்டிரபதி ஆட்சி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது" என்று திரு. சவான் கூறினார்.

### "சட்டசபை கலைக்கப்படவில்லை"

"சட்டசபை கலைக்கப்படவில்லையா?" என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, சட்டசபை கலைக்கப்படவில்லையென்றும், சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டபின்னர் சட்டசபையைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. சவான் பதிலளித்தார்.

இந்திய அரசியல் சாஸனத்தின்படி ராஷ்டிரபதி ஆட்சி 6 மாதகாலம்வரை செல்லுபடியாகும். ஆனால் அதன் பின்னரும் இந்த ஆட்சியை நீடிக்கமுடியும்.

### கண்டனம்

ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். "ராஷ்டிரபதியின் ஆட்சி துரதிருஷ்டவசமானது, தவறானது" என்று சுதந்திராக்கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. எம். ஆர். மஸானி கூறியுள்ளார்.

"பெரும்தவறு, அநீதியான செயல். எதிர்க்கட்சியினருக்குப் பெரும்பான்மைப் பலம் உண்டு" என்று சுதந்திராக்கட்சியைச் சேர்ந்த மகாராணி காயத்திரிதேவி தெரிவித்துள்ளார். "அரசியல் சாஸனத்துக்கே முரணானது" என்று கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. டாங்கே கண்டித்துள்ளார்.

## கிணறுத் தகராறு

### கோர்ட்டில் வழக்கு

மாவிட்டபுரம். செவ்.

தையிட்டி கிராமத்தில் சிறுபான்மைத் தமிழர்களுக்குள் இரு பிரிவினருக்கிடையேஏற்பட்டுள்ள சச்சரவு காரணமாக, மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தையிட்டி சீவல் தொழிலாளர்கள் பாவித்துவந்த பொதுக்கிணற்றை நகரசுத்தித்தொழிலாளர்கள்பாவித்ததால் இச்சச்சரவுஆரம்பமானதாகத் தெரிகின்றது.

பல வருடங்களாக பாவிக்கப்பட்டுவந்த இந்தபொதுக் கிணற்றை இப்பொழுது யாரும் பாவிப்பதில்லை.

## பிரிட்டிஷ் பலே நடனக் குழு

லண்டன், மார்ச் 14

பிரபல பிரிட்டிஷ் பலே நடன நர்த்தகி பெலிண்டா ரைட்டும், ஜெல்கே யுரேஷவும் இலங்கைக்கு விஜயம் செய்து மார்ச் 18, 19-ந் திகதிகளில் கொழும்பில் நடனவிருந்தளிப்பர். இலங்கை கலை நிலயக்கிளப்பின் ஆதரவுடன் பிரிட்டிஷ் கவுன்ஸில் இந்நடன விருந்தை அளிக்கின்றது. "ரோமியோவும் ஜூலியட்டும்", "தூங்கும் அழகி" போன்ற பிரசித்திபெற்ற காதல் நடனங்களும் இந்நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

இவர்கள் இருவரும் இலங்கையில் எட்டுநாள் தங்கியிருந்து, மாணவருக்கு பலே நடனம் பற்றிய [illegible] விளக்கங்களை அளிப்பர்.

இலங்கையிலிருந்துவந்த

## 1,50,000ரூபா பெறுமதியான கடத்தல் பொருள்கள்

### திருத்துறைப் பூண்டியில் கைப்பற்றப்பட்டன

திருத்துறைப்பூண்டி, மார்ச் 14

இலங்கையிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல்பொருள்களை திருத்துறைப்பூண்டி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள "தீவு" என்ற இடத்துக்கு பெருமளவில் சட்டவிரோத கடத்தல் பொருள்கள் வந்திருப்பதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸ்கோஷ்டி 29 கராம்பு மூடைகளையும், 10 பாக்கு மூடைகளையும், 15 சாதிக்காய் மூடைகளையும் கைப்பற்றினர். படகும் கைப்பற்றப்பட்டது. அது குறித்து எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## "அதிகாரமற்ற ஜனதிபதி டாக்டர் சுகர்னோ"

### ஜெனரல்சுஹார்ட்டோ கூறுகிறார்

ஜாகர்த்தா, மார்ச்14

'டாக்டர் சுகர்னோவிடமிருந்து அதிகாரங்கள் பறிக்கப்பட்டபொழுதிலும் அவர் தற்போதைக்கு அரசியல் அதிகாரமற்ற ஜனதிபதியாகத் தொடர்ந்திருப்பார்' என்று இந்தோனேஷியதற்காலிக ஜனதிபதி ஜெனரல் சுஹார்ட்டோ கூறியுள்ளார்.

தற்காலிக ஜனதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் விடுத்துள்ள செய்தியில், சுகர்னோ நிலைமையை ஒரு பிரச்னையாக்கவேண்டாமென்று பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

'டாக்டர்சுகர்னோ உடல் நலக்குறைவாகவிருக்கிறார். அவரிடமிருந்து மக்கள் ஆலோசனை காங்கிரஸ் அதிகாரங்களைப்பறித்ததேதவிர பதவிநீக்கம் செய்யப்படவில்லை. இது மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கை' என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஷோம்பேக்குமரண தண்டனை

லியபோல்ட்விலி, மார்ச் 14

காங்கோவின் முன்னாள் பிரதமர் ஷோம்பே குறித்து இங்கு விசாரணை நடத்திய நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

ஷோம்பே மீது சதிக்குற்றச்சாட்டுகள் சுமத்தி இந்த நீதிமன்றம் விசாரணை நடத்தியது. ஆனால் ஷோம்பே இந்த விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவர் வெளிநாட்டிலிருக்கிறார்.

ஷோம்பே ஆஜராகமலே நடைபெற்ற இவ்விசாரணையின் முடிவில் அவருக்கு மரணதண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.

## பிருங் வொறல் காலமானார்

கிங்ஸ்டவுண், மார்ச் 14

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் முன்னாள் காப்டனும் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரருமான சேர் பிருங்வொறல் நேற்று இங்குள்ள பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் காலமானார். அவருக்கு வயது 42. கடந்த ஒரு மாத காலமாக இவர் இரத்த சோகையினால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

சேர் பிருங்வொறல் ஜமைக்கா செனட்சபையின் ஓர் உறுப்பினராகவுமிருந்தார். இவர் மொத்தமாக விளையாடிய 51 கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் 3060 ஓட்டங்களை பெற்றிருந்ததுடன் 69 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தார். 1963ல் இங்கிலாந்துடன் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டில் இவர் 251 ஓட்டங்கள் பெற்றிருந்தார். இதனுடன் 70 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். 1960 — 61ல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்டில் சேர் பிருங்வொறல் சிறப்பாக விளையாடியதற்காக மெல்போர்ன் நகரில் அவருக்கும் கோஷ்டியினருக்கும் வீர வரவேற்பு அளிக்கப்பட்டது.

சேர் விருங்வொறல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டதும் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் அவருக்கு விருந்து ஒன்றை வழங்கினார்.

பிருங்வொறலின் மரணத்தையொட்டி ஜமைக்கா முழுவதும் இன்று [illegible]கள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன.

## இலங்கைவரும் ரக்பி நிபுணர்

லண்டன், மார்ச் 14

பிரபல பிரிட்டிஷ் ரக்பி உதைபந்தாட்ட பயிற்சி நிபுணரான திரு. ரோய் வில்லியம் அடுத்தவாரம் இலங்கை செல்லவிருக்கிறார். அவர் இலங்கையில் மூன்று வாரங்கள் வரை தங்கியிருப்பார்.

இலங்கை ரக்பி உதைபந்தாட்டச்சங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை விஜயம் செய்யவிருக்கும் அவர் கொழும்பிலுள்ள ரக்பி உதைபந்தாட்ட கிளப்புகள், கல்லூரிகளுக்கு பயிற்சி அளிப்பார். திரு. ரோய் வில்லியம் மலைநாட்டில் சில தினங்கள்வரை தங்கியிருப்பார். அவர் கொழும்பு விளையாட்டு மத்தியஸ்தர் சங்கக் கூட்டம் ஒன்றிலும் சொற்பொழிவு நிகழ்த்துவார். மார்ச்மாதம் 21-ந் திகதி அவர் பிரிட்டனிலிருந்து இலங்கை புறப்படுவார்.

## இலங்கை வரவிருக்கும் கட்டிடக்கலை நிபுணர்கள்

லண்டன் மார்ச் 14

பிரபல பிரிட்டிஷ் கட்டிடக்கலை நிபுணர்கள் பலர் இம்மாதம் இலங்கைக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய கட்டிடக்கலை நிபுணர்கள் மாநாட்டில் பங்குபற்றிய பின்னர் இவர்கள் இலங்கைக்கு வருவார்கள்.

இவர்களில் குறிப்பாக சாம்ராஜ்ய கட்டிடக்கலைக் கல்வித் தலைவரின் [illegible] ரான் பேராசிரியர் ஜே. ஆர். [illegible] சாம்ராஜ்ய கட்டிடக்கலை நிபுணர்கள் சங்கக் காரியதரிசி திரு. ரி. கொல்செஸ்டர் ஆகியோர் இம்மாதம் 23-ந் திகதி இலங்கைவிஜயம் செய்கிறார்கள். மார்ச் 27-ந் திகதி வரை இவர்கள் இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

## நீதிமன்றமொழியாக தமிழ்

சென்னை, மார்ச்14

தமிழ்நாட்டில் தமிழை நீதிமன்ற மொழியாக்குவதற்கு சட்டம் கொண்டுவரப்படவிருக்கிறது என்று தமிழ்நாட்டு சட்ட மந்திரி திரு. எஸ். மாதவன் தெரிவித்துள்ளார்.

"நீதிமன்றங்களில் தமிழ்மொழியில் அலுவல்கள் நடைபெறுவதக்கான ஒழுங்குகள் இப்பொழுது தயாராகிக்கொண்டு வருகின்றன. இது குறித்து தமிழ் அறிஞர்களுடனும் சட்ட நிபுணர்களுடனும் நான் ஆலோசனை நடத்தி வருகின்றேன். மொழி பெயர்ப்புவேலைகள் விரைவில் ஆரம்பமாகும்" என்றும் மந்திரி மாதவன் கூறினார்.

## அ. லி. சே. சங்க யாழ் கிளைக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 7-ந் திகதி சங்க அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

அன்று செயற்குழுவின் புதிய உறுப்பினர் தெரிவு நடைபெறும்.

## தபால்நிலையத்தை இடம் மாற்றுதீர்

கோண்டாவில், செவ்.

கோண்டாவில் உபதபால் நிலையத்தை தற்பொழுது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு அகற்ற வேண்டாமெனக் கோரி கோண்டாவில் கிழக்கு இந்து வாலிபர்சங்கம் யாழ். பெரும்பாக தபால் அதிகாரிக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

## தாலிக்கொடி களவில் கணக்கப்பிள்ளை கைது

கொத்மலை, செவ்வாய்

கொத்மலை - [illegible]திஸ்டனை தோட்டக் கண்டக்டரின் மனைவி திருமதி பெரியசாமி மனோரஞ்சிதம் தனியாக அறையில் தூங்கிக்கொண்டிருக்கும்போது, இனந்தெரியாத நபரொருவர் முகமூடி அணிந்துகொண்டு பலாத்காரமாக உள்ளே புகுந்து கழுத்தில் கையைப் போட்டு சுமார் பதினன்கு பவுண் பெறுமதியான தாலிக்கொடியைப் பலவந்தமாகப் பறித்ததுமல்லாமல் எட்டு மாதக் கர்ப்பிணியாகிய திருமதிபெரியசாமி மனோரஞ்சிதத்தைத் தலையிலும் முகத்திலும் தனது கைகளால் பலமாகத் தாக்கினார். இச்சம்பவம் சில தினங்களுக்கு முன் நடந்தது.

மேற்படி தாலிக்கொடி களவு சம்பந்தமாக சீமான் என்றவர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இப்போது அதே தோட்டத்தைச் சேர்ந்த கணக்கப்பிள்ளை எஸ். முத்தையா என்பவரை நாவலப்பிட்டிப் பொலிசார் கைது செய்து ரிமாண்டில் வைத்துள்ளனர்.

## பெண்களுக்கு காணி

கிளிநொச்சி, செவ்வாய்

எஸ். எஸ். ஸி. படித்த பெண்களுக்கு மிருசுவிலில் அரசாங்கத்தால் கொடுக்கப்படவிருக்கும் காணிக்குரிய காணிக்கச்சேரி கிளிநொச்சி காணிக்கந்தோரில் நடைபெற்றது. யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமை வகித்தார். கரைச்சிக் காரியாதிகாரி பிரிவில் சுமார் 150 பெண்கள் இக்காணிக் கச்சேரிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இவ்வுலகம் ஒருமாபெரும் கல்விக்கூடம். ஒவ்வொரு அனுபவத்திலிருந்தும் உங்கள் பாடங்களை நன்கு கற்றுக் கொள்ளுங்கள். அப்போதனையை கண்ணுள்ளவன் காண்கிறான். காதுள்ளவன் கேட்கிறான்.

—சுவாமி சிவானந்தா


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஞு பங்குனி மீ 1 வ (14-3-67)


## பத்திரிகைச்சபை

ஜனநாயகத்துக்கு அபிப்பிராய சுதந்திரம் ஆணிவேர் போன்றதென்றும் பத்திரிகை மூலந்தான் பொதுமக்கள் தங்கள் அபிப்பிராய சுதந்திரத்தைப் பயன்படுத்துகிறார்களென்றும் கண்டியில் ஆசியப் பத்திரிகையாளர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்திய சர்வதேச பத்திரிகை ஸ்தாபனத் தலைவர் திரு. ஸி.ஈ.எல். விக்கிரமசிங்கா குறிப்பிட்டிருப்பது இலங்கையில் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போட வேண்டுமென நினைப்போரின் கண்களைத் திறப்பதாக இருக்கவேண்டும்.

பத்திரிகைகளுக்கு வாய்பூட்டுப்போட முன்னைய கூட்டரசாங்கம் எடுத்த முயற்சிகளை முறியடித்து பத்திரிகைச் சுதந்திரத்தைப்பாதுகாக்க திரு. விக்கிரமசிங்கா எடுத்தமுயற்சிகளையும் ஈட்டியவெற்றியையும் எவரும் மறந்து விடமுடியாது. ஜனநாயகத்தையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் விரும்பும் அனைவரும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இங்கு சில பத்திரிகைகள் தவறான முறையில் நடந்துகொள்வதால் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய அரசாங்கத்தைச்சேர்ந்த சிலரும் முயற்சிசெய்தனர். நல்லவேளையாக இந்த முயற்சியைப் பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை. தவறு செய்யும் பத்திரிகையாளர்மீது நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க இப்போதுள்ள சட்டம் இடம்கொடுக்கிறதென்றும் அது போதுமென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதற்காகப் பிரதமரைப் பாராட்டவேண்டும்.

இலங்கையிலுள்ள பத்திரிகைகளில் தம்மைத் தேசியப் பத்திரிகைகள் எனக்கூறிக் கொள்பவை கூட, குறுகிய தேசிய மனப்பான்மையுடனும் அரசியல் அபிலாஷையுடனும் பத்திரிகை விற்பனையைமட்டும் குறிக்கோளாகக் கொண்ட வியாபார நோக்குடனும் நடந்து கொள்கின்றன. இதனால் பத்திரிகைச்சுதந்திரத்தைத தவருகப்பயன்படுத்துவதுடன் ஒருதலைப்பட்சமாகவும் நடந்துகொள்கின்றன. நாட்டின் முன்னேற்றத்தையும் தேசிய ஒற்றுமையையும் சிதைக்கவும் மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய முறையிலும் அவை செயல்படுகின்றன. இது நாட்டின் முன்னேற்றத்துக்கோ, பத்திரிகைச் சுதந்திரத்துக்கோ ஜனநாயகவளர்ச்சிக்கோ எள்ளளவும் உதவி புரியாது.

எனவேதான் பத்திரிகைகள் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளவும் ஜனநாயகத்தையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும் இன, சமூக ஒற்றுமையை நிலைநாட்டி நாட்டை முன்னேற்றவும் தமக்குள் ஒருநெறிமுறைக் கோட்பாட்டை வகுத்துக் கொண்டு செயல்படுவதற்கு 'பத்திரிகைச்சபை' ஒன்று இங்கு அவசியமாகிறது. பத்திரிகைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டுமென்ற யோசனையை ஏற்க மறுத்த பிரதமரும் 'பத்திரிகைச் சபை' ஒன்றை அமைத்துக்கொள்ளுமாறு யோசனை கூறியிருக்கிறார். பிரதமரே இந்தயோசனையைத் தெரிவித்திருப்பதால் பத்திரிகையாளர்கள் தமக்குள் பத்திரிகைச்சபை யொன்றை அமைத்து செயல்படுவதற்கு அரசாங்கத்தின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். பத்திரிகைகள் சிறப்புறப்பணி புரியவும் வளர்ச்சியடையவும் பத்திரிகைகளுக்கும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும் வசதிகள் அளிக்கப்படவேண்டும். இதரநாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு இந்த வசதி மிகமிகக் குறைவு என்றே சொல்லவேண்டும். இருக்கும்வசதிகளும் ஒருசில இடத்திலேயே குவிந்துள்ளது. எனவே 'பத்திரிகைச் சபை' ஒன்றை இங்கு விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமும் அவசரமுமாகும்.

## விஞ்ஞானக் கப்பலின் ஆராய்ச்சிகள்

மாஸ்கோ. மார்ச் 14

'அகடமிக் குர்சடோவ்' கப்பலின் முதல் பிரயாணத்தின் போது விஞ்ஞானிகள் 71/2 கிலோ மீட்டர் தாழ்ப்பத்திலிருந்து, மாதிரிகளைப் பெற்றனர்.

ஆராய்ச்சிக் கோஷ்டியின் தலைவர் பேராசிரியர் மொனின் 'ட்ருட்' பத்திரிகையில் இது பற்றி எழுதியுள்ளார். ''மத்திய அட்லாண்டிக் மலைத் தொடரின் மிக ஆழமான பகுதியான ரொமன் சேயில் ஒரு பெரிய வலை இறக்கப்பட்டது. இந்த வலை சமுத்திரத்தின் ஆழமான பகுதியில் வாழும் பல 'வாசிகளுடன்' மேலே கொண்டு வரப்பட்டது. கீழ் மட்ட ஆழ சுழியோட்டங்களும் ஆராயப்பட்டன' என்று பேராசிரியர் எழுதியுள்ளார். புயல் வீசும் போது அலைகளின் உயரம் காலம் பற்றியும் தகவல்கள் கிடைத்தன.

இந்த விஞ்ஞானக் கப்பல் ஏப்ரலில் மீண்டும் விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரயாணத்தை மேற்கொள்ளும். இந்துமா சமுத்திரத்தில் செயிசெலஸ் தீவுகளின் ஆழ்கடலை இது ஆராயும்.

## இலங்கைத் தேயிலை வெள்ளிப்பேழை

கொழும்பு, செவ்.

லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் சேர். லலிதா ராஜபக்ஸ. இம்மாதம் 21ம் திகதி, பக்கிங்ஹாம் மாளிகையில் இலங்கைத் தேயிலையைக் கொண்ட வெள்ளிப் பேழையை எலிசபெத் மகாராணியாருக்கு கையளிப்பார். இலங்கை தேயிலைத் தொழில்துறையின் நூற்றாண்டு வைபவத்தை முன்னிட்டு இலங்கைப்பிரதமர்திரு டட்லி சேனநாயக, மகாராணியாருக்கு இந்த வெள்ளிப் பேழையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

# ''தமிழ் பண்டித வித்துவான்களுக்கு பட்டதாரி சம்பளம் வேண்டும்'

## தமிழாசிரியர் சங்க வருடாந்த அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''தமிழ் பண்டித வித்துவான்களுக்கும், பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவேண்டும். தமிழ்த் தராதரப்பத்திர ஆசிரியர்க்கும், எஸ். எஸ். சி தமிழ் தராதரத்துடன் பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த சேவை தராதரப்பத்திர ஆசிரியர்க்கும், சம்பள விஷயத்தில் இழைக்கப்பட்ட அநீதி உடனே நீக்கப்படவேண்டும்''

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 16-வது வருடாந்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் விகிதாசாரப்படி தமிழாசிரியர்களும் முஸ்லிம் பிள்ளைகளின் விகிதாசாரப்படி முஸ்லிம் ஆசிரியர்களும் நியமிக்கப்படுவர் என்ற கொள்கை படிப்படியாகத் தளர்வுறுவதாக அறிகிறோம். முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் சராசரிக்குத் தமிழாசிரியர்கள் நியமிக்கப்டாததோடுசிலபகுதிகளில் தமிழ்ப்பாடசாலைகளிலுள்ள முஸ்லிம் பிள்ளைகளின் விகிதாசாரத்துக்குக் கூடுதலாக முஸ்லிம் ஆசிரியர்களை நியமிக்க முற்படுகின்றனர். அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படவேண்டும், அதே நேரத்தில் எமதுரிமையும் பாதுகாக்கப்படவேண்டும். மாகாணவித்தியாதிபதிமார் தமிழ் ஆசிரியர்கள் போதாதென்கிறார்கள். உண்மைநிலையைக் கணக்கிட்டு நியமனங்கள் வழங்க வேண்டும். தமிழ்த் தலைவர்களையும் இதுபற்றிச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும் என வேண்டுகிறோம். அத்துடன்சிங்களப் பாடசாலைகளுடன் உள்ள தமிழ்ப்பிரிவுகட்குத்தமிழ்த்தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்எனவும் கல்வி அமைச்சை வற்புறுத்தியுள்ளோம்.

தமிழ்ப்பிள்ளைகளின் தாய்மொழி தமிழ்மொழியாக இருக்கவேண்டும். அறிக்கை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கஆசிரியசங்கங்களுக்குச் சந்தர்ப்பம் தரவேண்டும். ஆசிரியர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்பற்றி சட்டங்களோ மாற்றங்களோ செய்வதற்கு முன் சங்கங்களுடன் கலந்து முடிவுசெய்யுங்கள் எனக் கௌரவ மந்திரியைக்கேட்டுள்ளோம்.

## ஊர்வலத்துக்கு அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை வாலிபர் சங்க சம்மேளன ஐந்தாவது யாழ் பிரதேச மகாநாட்டு ஊர்வலத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டதாக சம்மேளன அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

12 மைல் நீளமான இந்த ஊர்வலம் இம்மாதம் 25-ந் திகதி நண்பகல் 1 மணிக்கு காங்கேசன் துறையில் ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியை வந்தடையும்.

## மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இடமாற்றம் செய்யப்பட்டிருந்த வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை பொதுமக்களின் பலத்த புகாரினால் அரசாங்கத்தின் உத்தரவைத்தொடர்ந்து மீண்டும் பழையஇடத்திலேயே அமைக்கப்பட்டுளது.

இந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னர் இருந்த இடத்திலிருந்துஎந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி வேருெருஇடத்திற்கு திடீரென மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்துவேலணைப் பொது மக்கள் திறைப்பகுதிக் காரியாதிகாரிக்கும், வடமாகாண அரசாங்க அதிபருக்கும் புகார் செய்திருந்தனர். இதன்காரணமாகவே அரசாங்கத்தின் திடீர் உத்தரவைத் தொடர்ந்து மீண்டும் பழைய கட்டடத்திலேயே சங்கம் இயங்க ஆரம்பித்துள்ளது.

இது சம்பந்தமாக வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேரா உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர், தீவுப் பகுதிக் காரியாதிகாரி ஆகியோர்ஒரு விசேஷ கூட்டம் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

[ந.நி.]

# கோழிக்கு ஒரு கும்பிடு

சபாஷ்! இலங்கைவாழ் கோழியினங்களே! உங்களுக்கு ஒரு பெரிய கும்பிடு! குண்டூசி முதல் 'குறுண்டிக்' வரை வெளிநாடுகளையே நம்பியிருக்கும் நமது வீர ஸ்ரீலங்கா, ஓர் உணவுப் பொருளிலாவது தன்னிறைவு காண, நீங்கள் உதவியதற்காக ஒரு பெரிய சலாம்!

ஆமாம், கோழிமுட்டை உற்பத்தியில் நாங்கள் தன்னிறைவு கண்டுவிட்டோமாம்! ஆகையால் எங்கள் தேவைக்குப் போதுமான முட்டைகளை எடுத்துக்கொண்டு மிஞ்சி இருப்பவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்போகிறோமாம்! சில நாட்களுக்கு முன் அரசாங்கத்திலுள்ள ஒருவர் இப்படிக் கூறிய செய்தி பத்திரிகைகளில் வந்ததைப் படித்துவிட்டுத்தான் இப்படி உங்களுக்குச் சபாஷும் சலாமும் போடுகிறேன்.

ஆனால், இந்தச் செய்தி என்னுடைய மண்டையில் ஒரே குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. அஃது என்னவென்றால்:-

நானும் ஒரு முட்டை சாப்பிடுகிறவன். யாழ்ப்பாண டவுனில் தற்சமயம் ஒரு கோழி முட்டை 28, 30 சதமாக விற்கிறது. இது ஊர் முட்டை, அதாவது நாட்டுப்புறங்களில் மக்கள் வளர்க்கும் நாட்டுக்கோழிமுட்டை. கோழிப்பண்ணைகளில் வளரும் 'லெக்கோண்' முதலிய சாதிக் கோழிகளின் முட்டை 25 சதத்துக்கு கிடைக்கிறது.

கிராமப்புறங்களில் ஊர் முட்டை தான் அநேகமாக கிடைக்கிறது. இதன் விலை இப்பொழுது 20 சதம்.

முன்னை மூன்று சதத்துக்கு முட்டை வாங்கி சாப்பிட்ட இந்த வாய் 20, 28, 30 சதத்துக்கு இப்பொழுது வாங்க வேண்டியதையும், இலங்கை கோழி முட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தயாராயிருக்கிறதென்பதையும் கேள்விப்பட்டு 'ஆ' என்று பிளக்கிறது.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கத்தின் விற்பனவு [illegible] படும் 'மார்க்கட்டிங்' இலாகா தன்னிடம் 16 முதல் 20 சதத்துக்குமிடையில் கோழிமுட்டை கிடைக்கிறதென்று பத்திரிகைகளில் பிரசாரம் செய்வது, வெந்த புண்ணில் வேலை ஏற்றுவது போலவும், மரத்தால் விழுந்தவனை மாடு ஏறிமிதித்தது போலவும் இருக்கிறது.

இந்த இலாகாவிலுள்ள உத்தியோகத்தர்கள் கிராமங்கள் தோறும் சென்று மரக்கறி வகைகளையும், கோழிமுட்டை முதலிய உணவுப் பொருட்களையும் உற்பத்தியாளர்களிடம் வாங்கிப் பொதுமக்களுக்கு விற்கிறார்கள். இந்த இலாகாவுக்கென்று தனியாகக் கடைகள் உள்ளன. உதாரணமாக, யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதற்கும் ஆக இரண்டே இரண்டு கடைகள் இருக்கின்றன. ஒன்று சுன்னாகச் சந்தைக்கு அண

## நாட்டிலும் நகரிலும்

மையில். மற்றது சுண்டிக்குளியில், பெரிய கடையிலுமல்ல.

மலிவான காய்கறிகளையும் கோழி முட்டைகளையும் வாங்க விரும்பினால் பொதுமக்கள் இந்த இரு கடைகளையும் தேடிப் பிடிக்க வேண்டும்.

கொழும்புப் பட்டினத்தில் மட்டும் 'மார்க்கட்டிங்' இலாகாக் கடைகள் குறிச்சிக்குக் குறிச்சி இருக்கின்றன. அந்தக் கடைகளில் அவரைக்காய் இருபதுசதம், வாழைக்காய் பத்து சதம், பூசினிக்காய் ஐந்துசதம், கோழி முட்டை பதினறு சதம் என்று இந்த இலாகா அடிக்கடி பத்திரிகைகளில் ஒழுங்காக விளம்பரம் செய்துகொள்ளும்.

கொழும்பில் இருப்பவர்கள் மட்டும்தானா மரக்கறியும், கோழி முட்டையும் சாப்பிடுகிறவர்கள்?

கிராமப்புறங்களில் உணவுப்பொருட்களை வாங்கும் இந்த உத்தியோகஸ்தர்கள் மிகக் குறைந்த விலையில் இவற்றை உற்பத்தியாளர்களிடம் வாங்கி அடுத்த நிமிடம் தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கூடுதலான விலைக்கு விற்று, லாபத்தை மடியில் போட்டுக்கொள்வதற்கு எவ்வித தடையுமில்லை.

கோழிமுட்டை ஒன்று பதினறு சதமென்று விளம்பரப்படுத்தினால்தான் கிராமத்தவர்களிடம் பதினைந்து சதத்துக்காவது வாங்கலாம் என்று ஒரு தந்திரமா?

பதுளைபண்டாரவளைபகுதிகளிலும் வன்னி, அம்பாந்தோட்டைபோன்றவரண்ட பிரதேசங்களிலும் கிராமப்புற மக்கள் ஏராளமான பச்சை மரக்கறிகளை உற்பத்தி செய்துவிட்டு அவற்றை விற்பனை செய்து கொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள். அழுகிப் போன மரக்கறிகளை சில இடங்களில் கொளுத்தி எரிக்கிறார்களாம்.

இவை எல்லாம் பசியால் வாடும் மக்களுக்கு, பயன்படுத்தச் செய்வது 'மார்க்கட்டிங்' இலாகாவின் பெரிய பொறுப்பும் கடமையுமாகும். இதில் அது முழுக்கமுழுக்க தவறுவிட்டதென்பது கண்கூடாகும்.

இதற்கிடையில் கோழி முட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதென்ற யோசனை, வற்றி வரண்டுபோன நமது அந்நியசெலாவணிப்பெட்டகத்தை நிரப்புவதற்குக் கையாளப்படும் ஒரு 'திருக்கீஸ்' விளையாட்டோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுவார்த்தை சமரசமாக முடிந்தது

உடுவில், செவ்வாய்
ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத்தின் சுன்னுகம் கிளைக்கும், சுன்னுகம் பட்டினசபைக்கும் இடையே கோரிக்கைகள் சம்பந்தமாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் சமரசமாக முடிவடைந்துள்ளன.

உதவி உள்ளூராட்சிஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது ஸ்தலஸ்தாபன சபை சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 15 கோரிக்கைகளில் 13 கோரிக்கைகளை வழங்குவதற்கு சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் சம்மதம் தெரிவித்தார். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் பட்டினசபையின் சார்பில் தலைவர் பொ. நாகலிங்கம், காரியதரிசி திரு. நல்லைநாயகம், சுன்னுகம் சுகாதாரப் பரிசோதகர்ஆகியோரும் ஸ்தலஸ்தாபனசங்கத்தின் சார்பில் பொதுக்காரியதரிசி ஆர். செல்லையாவும், மாவட்டப் பிரதிநிதி க. குமாரசாமியும் கலந்துகொண்டனர்.

## எதிரி விடுதலை

காலி, செவ்வாய்
பத்தெகமபொலிஸ் பகுதியிலுள்ள அம்பேகம்மைச் சேர்ந்த கிழவரான எச். கே. ஏப்ரகாம், தனது மருமகன், தனது பேரனுன ஆறு வயதுச் சிறுவன் சுனிலை அடிப்பதைக் கண்டார். அடிப்பதை நிறுத்தும்படி அவர், மருமகனிடம் கூறினுர். ஆனுல், அதைச் செவிசாய்க்காது, மருமகன் மேலும் அச் சிறுவனைத் தாக்கினுர். ஏப்ரகாம் பொல்லொன்றை எடுத்து, தனது மருமகனுன சாண்போஎன அழைக்கப்படும் ஈ. கே. போலிசை தாக்கினுர். மருமகன் இறந்துவிட்டார்.

ஈ. கே. நோலிசின் மரணம் மீது, சம்பவம் நடைபெற்ற இடத்தில்வைத்து காலி மாஜீஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் விசாரணை நடாத்தினுர். சந்தேகநபரான ஏ. கே. ஏப்ரகாம் மாஜிஸ்திரேட் முன்னிலையில்ஆஜர்செய்யப்பட்டார். சாட்சியங்களை விசாரித்தபின் ஏப்ரகாம் 'தனிப்பட்ட பாதுகரிப்புக்காக' நடவடிக்கை எடுத்துக்கொண்டாரென்ற அடிப்படையில், மாஜிஸ்திரேட் ஏப்ரகாமை விடுதலைசெய்தார். பத்தேகம பொலிஸ் இன்ஸ்பெக்டர் டேவிட், சாட்சியங்களை வழிநடாத்தினுர்.

## தேவார திருவாசக பண்முறை வகுப்புகள்

கொழும்பு, செவ்.
தேவாரம் திருவாசகம் முதலியவற்றைப்பண்ணேடு பாடும் வாய்ப்பை யாவருக்கும் அளிக்கும் நோக்கத்துடன் கொழும்பு விவேகானந்தசபையாரும், அரசாங்கத்தின் இந்துசமய ஆலோசனைச் சபையாரும் சேர்ந்து தேவார இன்னிசைச் செல்வர், தேவாரமணி, தமிழ் இசைமணி பி. ஏ. எஸ். இராசசேகரனை தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்க ஏற்பாடு செய்துள்ளனர். இன்று இவர் இலங்கை வந்து சேர்வாரென எதிர்பாாக்கப்படுகிறது. திரு. இராசசேகரன் இலங்கையில் ஒருவருட காலம்வரை தங்கியிருந்து இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று பயிற்சி அளித்து வருவார். முதல்மூன்று மாதகாலத்தில் வடகொழும்பிலும், தென் கொழும்பிலும்இச்சபையினரால் தேர்ந்தெடுக்கப்படும் சில ஆண்களுக்கும், பெண்களுக்கும், தேவார ஆசிரியருக்கும் பயிற்சிஅளிக்கப்பட இருக்கிறது.

## டின்னுக்குள் கைக்குண்டு
### சிறுவன் மயிரிழையில் உயிர் தப்பினுர்

கொட்டாஞ்சேனை, திங்கள்
வீதியின் ஓரத்தில் ஓர் அழகிய டின் கிடப்பதைக் கண்ட பன்னிரண்டு வயதுச் சிறுவன் அதனை எடுப்பதற்காக டின் அருகில் செல்லும்போது அது எதிர்பாராத விதமாக வெடித்தது. இதனுல் சிறுவன் சிறு காயங்களுடன் உயிர் தப்பினுன். இந்த சம்பவம் நேற்று கொழும்பு பாலத்துறையில் நிகழ்ந்தது.

வெடிச்சத்தம் கிளம்பிய அந்த டின்னை பரிசோதித்து பார்த்தபோது அதனுள் சில கைக்குண்டுகளிலிருக்கக் காணப்பட்டன. இது குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வேலை கிடைக்கும

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலையில்லாமலிருக்கும் மூன்று கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் வேலை வாய்ப்பளிக்க அரசாங்க அதிபர் முன் வந்துள்ளார்.

யாழ். கப்பல் பறியல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாண மக்கள் கப்பல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வல்வை கப்பல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் பதிவுசெய்யப்பட்டபோதிலும் கடந்த பல காலமாக வேலையில்லாமலிருப்பதாக உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. செல்வரத்தினம் அரசாங்க அதிபரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணத்தில் அரிசி இறக்கிக்கொண்டிருக்கும் இரண்டாவது கப்பலில், யாழ் கப்பல் பறியல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. அடுத்து இம்மாதம் 23ம் திகதிகாங்கேசன்துறைவரும் 'இஞ்முள்' மாவுக்கப்பலில் மற்றைய இரண்டு சங்கங்களுக்கும் வேலை அளிக்க அரசாங்க அதிபர் ஒழுங்குசெய்துள்ளார்.

[ந. நி]

## தாளையடிபஸ்சேவை சீர்கேடு

தாளையடி, செவ்வாய்
யாழ்ப்பாணம் தாளையடிபஸ்சேவை குறித்து இப்பகுதிமக்கள்பெரும் அதிருப்தி யடைந்திருப்பதாகத் தெரிகிறது. தாளையடியிலிருந்துஅதிகாலையில்புறப்படும் பஸ் புதிய நேர அட்டவணையின்படி சாவகச்சேரியில் தங்கிச் செல்வதால், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கோ, முக்கிய அலுவலாகவோ செல்பவர்கள் நேரத்துக்குயாழ்ப்பாணம் செல்ல முடியாதிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது. இது சம்பந்தமாக தாளையடிகிராம முன்னேற்றச் சங்கம் வடபகுதி இ. போ. ச. முகாமையாளருக்கும், அரசாங்க அதிபருக்கும், பருத்தித் துறை எம். பி.க்கும் மகஜர்மூலம் குறையைத் தெரிவித்திருந்தும்இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

இவ்வகுப்பில் சேரவிரும்புவோர் பொதுசெயலாளர், விவேகானந்தசபை, கொழும்ப என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளலாம்.

## ஸ்டாலின் புதல்வி பற்றி 'டாஸ்'

மாஸ்கோ, மார்ச் 14
பத்திரிகையாளர் பலர் விசாரித்ததைத்தொடர்ந்து ஸ்டாலின் மகள் ஸ்வெட்லாஞ அலிலுவேவா இப்போது வெளிநாட்டில் இருக்கிருர் என்பதை 'டாஸ்' ஊர்ஜிதம் செய்தது.

மாஸ்கோவில் மரணமான இவரது கணவரான இந்தியப் பிரஜையின் அஸ்தியை அடக்கம் செய்வதற்காகஇந்தியாவுக்குப் போவதற்கு ஸ்வெட்லாஞவுக்கு 1966 இறுதியில் பிரயாண விஸா வழங்கப்பட்டது. இவர் எவ்வளவு காலம் வெளியில் இருப்பார் என்பது இவரது சொந்த விஷயமாகும்'' என்று டாஸ் தெரிவித்துள்ளது.

## பற்றைக்குள் துப்பாக்கி

உடுப்பிட்டி, செவ்.
புலோலி தெற்கில் அண்மையில் நடந்த துப்பாக்கிச்சூட்டின்போது பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் துப்பாக்கியொன்று பொலிசாரிடம் சிக்கியுள்ளது. இத் துப்பாக்கி பருத்தித்துறைப் பொலிஸாரின் புலன்விசாரணையின் போது வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குச் செல்லும் பாதையிலுள்ளபிள்ளையார்கோவில் வளவில் ஒரு பற்றைக்குள் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப துப்பாக்கியின் உரிமையாளர் எவரும் கண்டுபிடிக்கப்பட வில்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர்.

## ப. நோ. சங்கம் ஸ்தாபிக்க முடிவு

புதுக்குடியிருப்பு, செவ்
வவனியாஎம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் முத்தையன் கட்டுக்குளத்தின் சிறுபயிர்ச்செய்கைகுடியேற்றத்திட்ட விவசாயிகளின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முல்லைத்தீவு காரியாதிகாரி, அரசாங்கஅதிபர் ஆகியோர்இக்கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்தனர்.

விவசாயிகள் விரைவில் தங்கள் நலனைக்கவனிக்கும் பொருட்டுகடனுதவிபெறும் நோக்கத்தோடு பலநோக்குச் சங்கமொன்றை ஸ்தாபிப்பதென முடிவுசெய்துள்ளனர்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் தட்டெழுத்தாளர் இல்லாதகுறையை நீக்குக'

கொழும்பு, செவ்.

"தமிழ்மொழிச் சிறப்பு ஏற்பாட்டுச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளை பல அமைச்சுகளும், திணைக்களங்களும் செயற்படுத்த ஆயத்தமாக இருந்தும், தமிழ் தட்டெழுத்தாளரும், தட்டெழுத்துக் கருவிகளும் இல்லாததால் தமிழ்மொழிச் சட்ட விதிகளை நிறைவேற்ற இயலாமல் இருப்பதாக நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கேட்டுக்கொண்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த வருடம் நவம்பரில் நடத்தப்பட்ட தமிழ்த் தட்டெழுத்தாளர் தேர்வுப் பெறுபேறுகளையும் தமிழ் மொழிப் பெயர்ப்பாளர் பெறுபேறுகளையும் உடனடியாக வெளியிட்டு, அவ்வவ் வெற்றிடங்களை நிரப்ப ஆவன செய்யும்படி தயவாக வேண்டிக்கொள்கிறோம். தமக்குத் தேவையென்று கேட்ட எல்லாத் திணைக்களங்களும் தமிழ்த் தட்டெழுத்துக் கருவிகளையும் தருவிக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி தயவாக வேண்டிக்கொள்கிறோம்.

## நிறைவு விழா

யாழ்ப்பாணம், புதன்

சாந்தையர்மடம் — சைவ சமய அபிவிருத்திக் கழகத்தில் பன்னிரண்டாவது நிறைவுவிழாவும், சிவராத்திரி விழாவும் கழகத்தலைவர் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

நாவலர் காட்டிய வழியில் இக்கழகம் சமயத்திற்கும்-தமிழுக்கும் பல தொண்டுகள் புரிந்துவருகின்றதெனவும், சமயக்கல்வியில் இளஞ்சிறுர்களை ஊக்குவிப்பதற்காக வருடந்தோறும் சைவ சமய அறிவுப் போட்டியையும் வெள்ளிக்கிழமை தோறும் திருமுறை ஓதுதலையும் நடாத்தி வருகிறதென்றும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

சைவசமய அறிவுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பண்டிதர் வித்துவான் திரு. கே. கே. நடராஜன் பரிசில்களை வழங்கினார்.

## பஸ்பிரயாணிகள்சங்கம

மீசாலை, செவ்வாய்

மட்டுவில் வடக்கு பஸ்பிரயாணிகள் சங்கம், மட்டுவில் வடக்கு சந்திர மவுலீச வித்தியாசாலைமண்டபத்தில்அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவராக திரு.மு.சுப்பிரமணியமும், செயலாளராக திரு.சி. கந்தசாமியும். பொருளாளராக திரு.அ. குமாரவேலுவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வைத்தியப் பரிசோதனை

சங்கானை, செவ்.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவ மாணவிகள் வைத்திய பரிசோதனை செய்யப்பட்டார்கள்.

திரு. க. சிவராமலிங்கம், திரு. க.முருகேசு, திரு. பா. சிவகணநாதன், செல்வி பா.அருளானந்ததேவி, திரு. ம. செல்வராசா, திரு. இ. கருணைகரன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.


## டைம் கிறீம்

உலகப் பிரசித்திபெற்றது. இரம்மியமானது. இது, இல்லறவாழ்க்கையில் பூரண திருப்தி அளிப்பது. புகழ் வாய்ந்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களால் உயர்தர ரசாயன மருத்துவ சாலையில் தயாரிக்கப்பட்டது. முழு விபரங்களுக்கும் எமக்கு எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பப்படும்.

விலை ரூ. 5/-

தபால் செலவு சதம் -/25

**மெட்ரோ ஏஜென்ஸி**

235 1/1, நொறிஸ்ரோட், கொழும்பு -11.


## ஐவரும் விடுதலை

மாவிட்டபுரம், செவ்வாய்

உரும்பராய் கரந்தன் கொலை வழக்கில் சந்தேக நபர்கள் ஐவரும் விடுதலை செய்யப்பட்டனர். வழக்குத் தாக்கல் செய்யப்போதிய சாட்சியங்கள் இல்லையெனப் பொலிசார் சார்பில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மல்லாகம் நீதிபதி திரு. நிற்சிங்கா சந்தேக நபர்களை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் உரும்பராயைச் சேர்ந்த காசியர் செல்லப்பா என்பவர் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 19-ம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக அதே இடத்தைச் சேர்ந்த பண்டாரி முருகன், பண்டாரி நாகமுத்தன், பண்டாரி இளையபதி, வைத்தி சிவராதிபதி, வைரமுத்து ஸ்ரீசதுரை ஆகிய ஐவரும் சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

1-ம், 2-ம் சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் எஸ். நடராசாவும், 3-ம், 4-ம் சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினமும்; 5-வது சந்தேக நபர் சார்பில் புறக்டர் எஸ். சிறிதரனும் ஆஜரானார்கள்.

## பாகப் பிரிவினை பலிகொண்டது

மாவிட்டபுரம், செவ்வாய்

கட்டுவனைச் சேர்ந்த 22 வயதான கந்தன் சீனியன் என்ற வாலிபர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. குமாரகுரு மரண விசாரணைசெய்தார். காலஞ்சென்ற சீனியன், தனது சகோதரனை முருகனிடம் சென்று தகப்பன் விட்டுச்சென்ற ஆதனத்தைப் பிரித்துத் தரும்படி கேட்டதாகவும், அதற்குச் சகோதரன், தகப்பனுர் கடனைவிட்டுச் சென்றிருப்பதாகவும், முதலில் கடன் தீர்க்கப்பட வேண்டுமெனக் கூறியதாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

காலஞ்சென்றவர் உடனே நச்சுத்திராவகத்தைச் சகோதரன் முன்னுல் குடித்ததாகவும் கூறப்படுகிறது. காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அவர் மரணமானுர்.

டாக்டர் வி. சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்திஞர். மரணவிசாரணை அதிகாரி, அற்பகாரணங்களுக்காக உயிரைமாய்த்துக்கொள்ளும் அளவிற்கு இளைஞர் பலவீனமடைந்துள்ளார்கள் எனத்தெரிவித்துத் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.


# யாழ்ப்பாண வாசிகளுக்கு 500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள் இலவசம்




6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி.பி.பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

*எப்பொழுதும் பாவியுங்கள்*

# போர்ஹான்ஸ்

பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின் தனித் தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது.

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லீறுகள் தோன்றின ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலியபற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும் வரை நிடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கிய முற்ற ஈறுகளும் வேண்டுமென்ருல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது. உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம் பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

இவ் விலவச அன்பளிப்பு மார்ச் 31ஆம் திகதியோடு முடிவடைகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மேற்கு ஆசிரிய சங்கம் நடத்திய

# பேச்சு, சங்கீதபோட்டிமுடிவுகள்

சுழிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மேற்குப் பிரிவு ஆசிரியர்சங்கம்நடாத்திய பேச்சு, சங்கீதப் போட்டி முடிவுகள் வருமாறு —

ஆங்கிலப்பேச்சு: (ஆண்கள்)

மேற்பிரிவு: கே. ராசேந்திரம் விக்டோறியாக் கல்லூரி, எஸ். ஏரம்பமூர்த்திவிக்டோறியாக்கல்லூரி, ரி. ஞானசம்பந்தன் காரைநகர் இந்துக்கல்லூரி, மத்தியபிரிவு: ஏ. சிறீதரன் விக்ரோறியாக் கல்லூரி. கே. குகானந்தன் விக்டோறியாக் கல்லூரி, எம். கணேசலிங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி, கீழ்ப்பிரிவு. வேலாயுதம் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, என். றூபன் பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி. எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி விக்டோறியாக் கல்லூரி.

பெண்கள்

மேற்பிரிவு: ரி. சிவராணி பண்டைத்தரிப்பு மகளிர்கல்லூரி, எம். பாத்திமா பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஆர். நாகேஸ்வரி விக்டோறியாக்கல்லூரி, மத்தியபிரிவு: ஆர். ரகுராஜினி யாழ்ப்பாணக்கல்லூரி) எஸ். தயாமணி பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி, எம். மதிவதனு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, கீழ்ப்பிரிவு சாந்தகுமாரி யாழ்ப்பாணக் கல்லூரி, ரஜனி யாழ்ப்பாணக்கல்லூரி, கே. விஜயாள் கிருஷ்ணு யாழ்ப்பாணக் கல்லூரி, வி. நீற்ரு சிவராஜா பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி.

தமிழ்ப்பேச்சு [ஆண்கள்]

மேற்பிரிவு: எஸ். பரமநாதன் காரைநகர் இந்துக் கல்லூரி, எம். குணசிங்கம் விக்டோறியாக் கல்லூரி, வி. செல்வராசா பண்டைத்தரிப்புஇந்துக்கல்லூரி, மத்திய பிரிவு பி. சோதீஸ்வரன் காரைநகர் இந்துக்கல்லூரி, சரவணபவன் வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி, எஸ். வேல்முருகன் பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரி கீழ்ப்பிரிவு: கே. செந்தில்நாதன் விக்டோறியாக் கல்லூரி. ஆர். தம்பு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, ரி. தனகோபால் பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரி, அதிமேற்பிரிவு: எஸ். சண்முகரத்தினம்விக்டோறியாக்கல்லூரி.

பெண்கள்

மேற்பிரிவு: கே. தேவகிராணி விக்டோறியாக் கல்லூரி, ஆர். விஜயகுமாரி பண்டைத்தரிப்பு மகளிர்கல்லூரி, எஸ். சிவலோகநாயகி விக்டோறியாக் கல்லூரி, மத்தியபிரிவு: எஸ். சீதாதேவி காரைநகர் யாழ்டன் கல்லூரி, கே. மேரிசாரதாபண்டைத்தரிப்புமகளிர்கல்லூரி, கே. கௌரீஸ்வரி விக்டோறியாக்கல்லூரி, கீழ்ப்பிரிவு: ரி. வசந்தகுமாரி பண்டைத்தரிப்பு மகளிர்கல்லூரி, எம் சிவசோதிலட்சுமிவிக்டோறியாக்கல்லூரி, என். நிமலநாயகி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

சங்கீதம் தனிப்பாடல்)

மேற்பிரிவு [பெண்கள்] கே பராபரி பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி, கே. கலாவதிபண்டைத்தரிப்புஇந்துக் கல்லூரி, கீழ்ப்பிரிவு [ஆண்கள்] கே. முத்துச்சாமி காரைநகர் இந்துக்கல்லூரி கே. சிவகுமாரன் காரைநகர் இந்துக்கல்லூரி.

கோண்டாவில், செவ்.

25-ம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக்கல்லூரிக்குமிடையே கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கிரிக்கட் போட்டி ஒன்று நடைபெறும்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி செவ்வாய்

கொடிகாமத்தில் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. கே. ஆழ்வாப்பிள்ளை கரணவாய் பகுதிக்கும், கரணவாயில் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. பி. சிவராமலிங்கம் கொடிகாமத்திற்கும் இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## புதன் 15 - 3 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா — சிறுவர்நிகழ்ச்சி.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 வாத்தியஇசை, 10-00 நேயர்விருப்பம்.


ராணி

அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்.

1 ஆம் பரிசு

சிங்கர் தையல் மெஷின் (கபினெற் மொடல்) அல்லது ரூ. 1000/- ரொக்கம்.



2 ஆம் பரிசு

ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ அல்லது ரூ. 525/- ரொக்கம்.



3 ஆம் பரிசு

ஒரு ஹம்பர் பைசிக்கிள் அல்லது ரூ. 300/- ரொக்கம்.



4 ஆம் பரிசு

டயமன் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவது பரிசு முதலாவதாகக் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைக்கு வழங்கப்படும். இவ்வாறே 2ஆம், 3ஆம், 4ஆம் பரிசுகள் இரண்டாவதாகவும், மூன்றாவதாகவும், நான்காவதாகவும் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைகளுக்கு வழங்கப்படும்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிறாள். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119, கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில்....... ராணி அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..............................

வயது ..............................

விலாசம் ..............................

ஒப்பம்: ..............................

விதிகள்

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிரான்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.

சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்

சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-37


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வவனியா உருளைக்கிழங்கை வெளியே அனுப்ப வேண்டாம்"

## உணவு மந்திரிக்கு எம். பி. கோரிக்கை

வவனியா, செவ்.

வவனியாவில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்குகளை வெளி இடங்களுக்கு அனுப்ப வேண்டாமென்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உணவு மந்திரியைக் கேட்டுள்ளார்.

உணவு மந்திரிக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வவனியா எம். பி. அனுப்பியுள்ள கடிதத்தில், வவனியாவில் உருளைக்கிழங்குக்குத் தட்டுப்பாடு இருக்கும்பொழுது வவனியா உருளைக்கிழங்கை வெளிஇடங்களுக்கு அனுப்புவதை அனுமதிக்கமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

''வவனியாவில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்குஇப்பொழுது கொழும்புக்கு அனுப்பப்படுகிறது. இதனைத்தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் இது அனுப்பப்படுகிறது, இதனுல் அரசாங்கத்துக்குக் கூடுதலான செலவுகளை ஏற்படுகின்றது. வவனியா உருளைக்கிழங்கை வவனியா மாவட்டத்திலே விநியோகித்தால் அரசாங்கத்துக்கு செலவு குறைவதுடன் இங்கு நிலவும் உருளைக்கிழங்குத் தட்டுப்பாட்டையும் குறைக்கமுடியும்'' என்று திரு. தா. சிவசிதம்பரம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Daily at 4-45, 7-00, 9-45
Aean Seberg
Sean Garrison
in
MOMENT TO MOMENT
[Technicolor]

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
K.R.ராமசாமி - சாவித்திரி
நடித்த
செல்லப்பிள்ளை

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
நடித்த
புதிய பாதை

REGAL - JAFFNA
NOW SHOWING
Jack Lemmon
Shirley Maclaine
in
IRMA LA DOUCE
(Adults)


## மாணவ ஆசிரிய பரீட்சைமுடிவுகள்

கொழும்பு, செவ்வாய்

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற கல்வி ஆலோசனை சபைக்கூட்டத்தில் இம் மாதம் ஜூன் மாதத்திற்குப் பின்னர் கடந்த ஆண்டில் நடைபெற்ற மாணவ ஆசிரிய பரீட்சைச் பெறுபேறுகள் வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது.

கிளிநொச்சி எம். பி. திரு, கா. பொ. இரத்தினம் இது சம்பந்தமாகக் கூட்டத்தில் கேட்ட கேள்வியின்போதே இத்தகவல் தெரிவிககப்பட்டுள்ளது. பெரும்பாலும் நியமனங்கள் அக்டோபர் மாதத்தில் இடம்பெறும் எனவும் தெரியவருகிறது.

## அரவம்தீண்டி மரணம்

புன்னுலைக்கட்டுவன், திங்.

உரும்பராயைச் சேர்ந்த எஸ். வீரசிங்கம் என்பவர் பாம்புக்கடியினுல் மரணமானுர்.

## சரசாலை கொலை வழக்கு

சாவகச்சேரி, சவ்வாய்

சரசாலையில் கடந்த மாதம் 19-ந் திகதி கந்தையா சிவகுரு என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக செல்லத்துரை பேரம்பலம் என்பர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது எதிரியின் வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் இக் கொலைவழக்குக்கு ஜி. ஜி. பொன்னம்பலம் வழக்கறிஞராக வரவிருப்பதால் இம் மாதம் 20-ந் திகதிக்கு ஒத்திவைக்கும்படி கோரினுர். அதற்கிணங்க அத் திகதி வரை விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் கொலை

## குற்றப் பத்திரிகை தாக்கல்

சாவகச்சேரி, செவ்.

மட்டுவில் தெற்கில் கடந்த மாதம் 18-ம் திகதி நடந்த கொலை சம்பந்தமாக சுப்பன் தம்பு, தம்பு சின்னப்பு ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி. எல். விஜயதிலகா சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார். விசாரணை இம் மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தற்கொலை

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரிசைச் சேர்ந்த மிருசுவில் தவசிக்குளம் என்னுமிடத்தில் சின்னத்தம்பி வைரவப்பிள்ளை [54 வயது[ என்பவர் நச்சுத்திரவகம்அருந்தி தற்கொலை செய்துகொண்டார் மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. ஞானச்சந்திரன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 9-ம் திருவிழா இன்று மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் திருவிளையாடல் கதாப்பிரசங்கத்தொடரில்''சமணரை கழு ஏற்றியமை'' என்னும் பொருள் பற்றிப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெறும் பின்னர் ஸ்ரீகருணுகடாட்சி சமேதஸ்ரீ கல்யாண சுந்தர மூர்த்தி எழுந்தருளி காட்சிகொடுப்பார்.

## யாருடையது

சி. எல். 7565 நம்பருள்ள காரில் பிரயாணப் பையும், வேறு பொருட்களும் விடுத்துச்செல்லப்பட்டு, அவை அளவெட்டி வி. திருநாவுக்கரசு என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# மீனவர்களை இராணுவத்தினர் பயமுறுத்தினராம்

முல்லைத்தீவு, செவ்.

ஏழை மீனவர்களைப் பயமுறுத்தி பலாத்காரமாக இராணுவத்தினர் இருல்களை எடுத்துச் சென்றனராம். இச் சம்பவம் முல்லைத்தீவுப்பகுதியில் நடந்துள்ளது.

வட்டுவாகல் ஆற்றில் இருல் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை முல்லைத்தீவில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரில் சிலர் பயமுறுத்தி, இருல்களை எடுத்துச் சென்றதாகவும் அதற்குப் பணம் கொடுக்கவில்லையென்றும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மீனவர்கள் இச்சம்பவம் பற்றிமுல்லைத்தீவுக்காரியாதிகாரியிடம் முறையிட்டுள்ளனர். காரியாதிகாரி உடனடியாக இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் கூறினுர்.

# இலங்கை வாலிபர் சங்க சம்மேளன மகாநாடு

## தென்னிலங்கை தலைவர்கள் கலந்து கொள்வர்

மாவிட்டபுரம், செவ்.

இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் ஐந்தாவது யாழ். பிரதேச மகாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஐந்து எம். பிக்கள் கலந்து கொள்வார்கள். மற்றும் சில எம். பிக்களும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பம் தெரிவித்துள்ளார்கள். தென்னிலங்கை உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் சிலரும் கலந்து கொள்வார்கள்.

இம் மகாநாடு காங்கேசன் துறையில் இம்மாதம் 24-ம் 25-ம் திகதிகளில் நடைபெறும். மகாநாட்டை டாக்டர் சினிவாசன் ஆரம்பித்துவைப்பார்.

மலைநாட்டு வாலிபர்சங்க பிரதிநிதிகளும், காலி, கண்டி கேகாலை, கொழும்பு கிளைச் சங்க பிரதிநிதிகளும், இம் மகாநாட்டில் கலந்து கொள்ள 24-ம் திகதி காலை யாழ்ப்பாணம் வருகின்றுர்கள். கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, மூதூர் எம். பி. ஜனுப் அப்துல் மஜீத். ஹொரணை எம்.பி. திரு. ரத்தனசிரி விக்கிரம நாயக்கா, பொலநறுவா எம்.பி. திரு. லீலாரத்தின விஜயசிங்கா ஆகியோரும் இம்மகாநாட்டில் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொள்வார்கள்.

## திருப்பாடுகள் காட்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

இயேசுக்கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளின் காட்சிகள் யாழ்ப்பாணம் ஆசனக்கோவில் மைதானத்தில் 17-ம் 18-ம் திகதிகளில் நடத்தி காண்பிக்கப்படும். இருதினங்களிலும் காட்சிகளைப் பார்க்க வருவோரின் வசதிக்காக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து கோவில் மைதானம் வரை பஸ்சேவை இருக்கும்.

## 7 பிள்ளைகளின் தகப்பன் தற்கொலை

கொழும்பு, செவ்.

அக்கரைப்பற்றில் ஏழு குழந்தைகளின் தகப்பன் எஸ். ரி. அண்ணுமலை என்பவர் தற்கொலை செய்து கொண்டார்.

கல்லோயா திட்டத்தில் காவலாளியாக இருந்த இவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்ததாகவும், மீண்டும் வேலைக்கெடுத்துக்கொள்ள நிர்வாகிகள் மறுத்து விட்டதால் அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரியவருகின்றது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## 288 கோடி ரூபாய் அமெரிக்க கடன்

புதுடில்லி, மார்ச் 14

இந்தியாவுக்கு மேலும் 288 கோடி ரூபா வரை கடன் வழங்கும் ஒப்பந்தம் ஒன்று இன்று அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில்கைச்சாத்தாகியது.

## புதியநிர்வாகிகள்

துணுக்காய், செவ்வாய்

துணுக்காய் பகிரங்க சேவையாளர் களியாட்டுக் கழகத்தின் புதியவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டவர். தலைவர்- திரு, இ.யெ.ஜெயரட்ணம் உபதலைவர்- திரு. எஸ். கதிரேசம்பிள்ளை, காரியதரிசி- திரு.எஸ். அல்பிறெட், உபகாரியதரிசி- திரு. ஆ. வி துரைராசா, தனுதிகாரி- திரு. எஸ். சிவசம்பு, கன்ரீன் காரியதரிசி- திரு. வி. சபாநாதன். நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கூ. மொ. வி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லாபம்கிடைத்திருக்கின்றது.

நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதாலும், மோசடிகள் தவிர்க்கப்பட்டு, கணக்கு விஷயங்கள் போன்றவை நிவிர்த்தி செய்யப்பட்டதாலும் இந்த முறை அதிக நிகரலாபம் கிடைத்திருப்பதாகக்கருதப்படுகின்றது.

## மரண அறிவித்தல்

### கே. தம்பிப்பிள்ளை

அம்பாறை கட்டட என்ஜினியர் திரு. கே. தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அருமைக்கணவரும், திருமதி தனலக்குமி மூத்துலிங்கம் ]ஆசிரியை, சென். சில்வஸ்ரார்], திருமதி ஞானமலர் மகேஸ்வரன், திருமதி தவமலர் அருளானந்தம். செல்விகள் ஜெயமலர், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பேராதனை சர்வகலாசாலை விரிவுரையாளர் முத்துலிங்கம், தற்போதுஇங்கிலாந்திலிருப்பவர்களான டாக்டர் மகேஸ்வரன், மின்சார என்ஜினியர் அருளானந்தம் ஆகியோரின் மாமனுரும், திருமதி சின்னத்தம்பி, உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதகர் ஜே. செல்லமுத்து, தம்பிஐயா ஆகியோரின் சகோதரும், மலாயன் பென்ஷனியர் எஸ். கந்தையாவின் மருமகனும் மயிலிட்டி கிராம சபைத் தலைவர் அருணுசலம், ராசரத்தினம் [யாழ். கச்சேரி] ஆகியோரின் மைத்துனருமாவர். அன்னுரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று [15-3-67[ மாலை 4 மணிக்கு கட்டுவன் மயானத்துக்கு மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

2361


2வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி கொழும்பு
பிளாஸா வெள்ளவத்தை
நவா கொம்பனித்தெரு
விஜயா மட்டக்களப்பு
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தாயின் மடியில்

கடைசி வாரம்
வெலிங்டன்
யாழ்ப்பாணம்
ஜெமினி கணேசன் — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த
வல்லவனுக்கு வல்லவன்


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org